


## 05. 08. 2025

## தலைப்பு செய்திகள்

- வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு வலுவாக செயலாற்றி வருவதாக தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு பாராட்டு தெரிவித்துள்ளது.
- விவசாயிகளுக்கு 14 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உர மானியங்களை அரசு வழங்கியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் விவரங்கள் குறித்து திமுக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை துணைமுதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.
- ஜெட்டாவில் நடைபெறும் ஆசிய கோப்பை கூடைபந்து போட்டியில் இந்தியா இன்று ஜோர்டானை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

**********

நாடாளுமன்ற குழு கூட்டம் - பிரதமர்

ஆபரேசன் சிந்தூர் மற்றும் ஆபரேசன் மகாதேவ் வெற்றிக்கு தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழுவினர் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானம் இன்று நிறைவேற்றினர்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு வலுவாக செயலாற்றி வருவதாக இந்த தீர்மானத்தில் பிரதமருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று காலை நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமரின் சீரிய தலைமையின் கீழ் நாடு பெருமிதம் கொள்வதாக தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு புகழாரம் சூட்டியது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் ஆபரேசன் சிந்தூர் வெற்றிக்கும், முப்படை வீரர்களின் துணிச்சல்மிகு செயலாக்கத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைரும் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

ஆபரேசன் சிந்தூர் வெற்றி, வரலாற்று சிறப்பு வாய்ந்தது என்று தெரிவித்துள்ள உறுப்பினர்கள் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங், திரு.அமித்ஷா, திரு.ஜே.பி.நட்டா, தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

**********

பிலிப்பைன்ஸ் அதிபர்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தில் துணை நின்ற பிலிப்பைன்ஸ் அரசுக்கும், அந்நாட்டு அதிபருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் அதிபர் Ferdinand Marcos-உடன் புதுதில்லியில் இன்று உயர்நிலை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் அதிபருடன் இணைந்து கூட்டாக பிரதமர் விடுத்த அறிக்கையில் இதனை தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையிலான அரசியல் நட்புறவின் 75 ஆண்டு தினம் கொண்டாடப்படுவதாக கூறிய பிரதமர் இருநாடுகளின் கலாச்சாரம் தொன்றுதொட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

முன்னதாக குடியரசு தலைவர் மாளிகையில் பிலிப்பைன்ஸ் அதிபருக்கு இன்று பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோர் **அதிபர்** Ferdinand-கு கவுரவ அரசு மரியாதையை வழங்கினர்.

**********

## கர்த்தவ்ய பாதை

பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் கட்டப்பட்டுள்ள கர்த்தவ்ய பவனை நாளை திறந்துவைக்கிறார்.

மத்திய வீட்டுவசதி நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால் புதுதில்லியில் இன்று இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளை ஒன்றிணைக்கும் வகையில் இப்புதிய வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

**********

## நாடாளுமன்றம்

பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனையில் எதிர்கட்சிகளின் கடும் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் இப்பிரச்சனையை எழுப்பிய காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மைய பகுதியில் குழுமி முழக்கமிட்டனர்.

இந்த முழக்கத்தின் ஊடே அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டார்.

எதிர்கட்சிகள் திட்டமிட்டு அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக அவைத்தலைவர் குறிப்பிட்டார்.

இச்செயல் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்றது அல்ல என்றும் திரு.ஓம்.பிர்லா கூறினார்.

அமளி தொடரவே அவைத்தலைவர் பிற்பகல் 2 மணிவரை அவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை காணப்பட்டதால் பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

**********

**சிவ்ராஜ்சிங் சவ்ஹான்**

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்தார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அமைச்சர், பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ் 4 லட்சம் கோடி ரூபாய், விவசாயிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

வேளாண் பெருமக்களுக்கு 14 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட உர மானியங்களை அரசு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

**********

**எல்.முருகன்**

தமிழ்நாட்டில் இதுவரை ஈர்க்கப்பட்ட முதலீடுகள் மற்றும் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளின் விவரங்கள் குறித்து திமுக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் இன்று வெளியிட்ட சமூகவலைதள பதிவில், தூத்துக்குடியில் விமான நிலைய விரிவாக்கம், துறைமுக மேம்பாடு உள்ளிட்ட மத்திய அரசின் திட்டங்களை தமிழக அரசு தங்களின் திட்டங்களாக பறைசாற்றி கொள்கிறது என்று குறை கூறினார்.

கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்ட முதலீட்டாளர் மாநாடுகளால் தமிழகத்திற்கு பயன்ஏதும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கில் 370 மற்றும் 35ஏ சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டு 6 ஆண்டுகள் இன்றுடன் நிறைவடைந்ததை சுட்டிக்காட்டிய அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த முக்கியமான முடிவால் கோடிக்கணக்கான மக்களுக்கு சம உரிமை கிடைப்பதுடன் வேலை வாய்ப்பு கல்வி சுகாதார சேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் எல்.முருகன் குறிப்பிட்டார்.

இந்த சிறப்பு அந்தஸ்து திரும்ப பெறப்பட்டது ஒரு வெற்றிகரமான நடவடிக்கை என்பது இதன்மூலம் புலப்படுவதாக கூறிய அவர், இதனால் ஒற்றுமை உணர்வு வலுப்படுத்தப்பட்டு ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற ஒட்டுமொத்த இலக்கை நோக்கி தேசம் பயணிப்பதாக கூறினார்.

**********

முதலமைச்சர்

சென்னை கொளத்தூர் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9 கோடியே 75 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளி கட்டிடங்களை இன்று திறந்துவைத்து நல திட்ட உதவிகளையும் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் 18 கோடியே 26 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலான காவல் நிலையத்தை காணொலி மூலம் திறந்துவைத்ததோடு,

17 கோடியே 65 லட்ச ரூபாய் மதிப்பிலான 14 புதிய திட்ட பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

**********

உதயநிதி

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, துணைமுதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்

மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

மழை நீர் வடிகால் மற்றும் நீர்நிலைகளை தூர்வாருவது உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்ட துணை முதலமைச்சர், பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

**********

**தங்கம் தென்னரசு**

தமிழகம், நீர்வள மேம்பாட்டில் சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று மாநில சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கவுசிகா நதி புனரமைப்பு, வரத்து வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளை இன்று துவக்கிவைத்த அவர், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால், சுற்றுப்புற சூழலில் ஏற்படும் மாற்றங்களை சீரமைப்பது அனைவரின் கடமை என்று கூறினார்.

அப்பகுதியில் 6 கோடியே 80 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் அருங்காட்சியக பணிகளை ஆய்வு செய்த அவர், அவற்றை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**********

**வரையாடு**

தமிழ்நாட்டில் வரையாடுகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டை விட தற்போது 21 சதவீதம் அதிகரித்துள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் நீலகிரி வரையாடு இரண்டாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு அறிக்கையின்படி இந்த ஆண்டு ஆயிரத்து 303 வரையாடுகள் இருப்பது கண்டறிப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம், முதுமலை, நீலகிரி பகுதிகளில் வரையாறுகள் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**********

கோவை

வேளாண் தோட்டங்களில் சூரிய சக்தி மின்சாரம் தயாரிப்பது குறித்த சர்வதேச மாநாடு கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இன்று தொடங்கியது.

வேளாண் பயன்பாட்டிற்காக மின் உற்பத்தி செயல்முறைகள், அதற்கான நவீன கருவிகள், தொழில்நுட்பங்கள் குறித்து சர்வதேச நிறுவனங்களை சேர்ந்த துறை வல்லுனர்களும், விஞ்ஞானிகளும் தங்களது கருத்துக்களை இதில் எடுத்துரைத்தனர்.

தமிழகம், மகாராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட 10 மாநிலங்களை சேர்ந்த இந்திய தொழில்நுட்ப கல்விக்கழகங்களின் மாணாக்கர் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களை சேர்ந்த 350க்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

**********

தேனி - வாய்ஸ்

வைகை அணை 69 அடியை எட்டியதையடுத்து, தேனி, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு இறுதி மற்றும் 3ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

கலந்தாய்வு

MBBS., BDS., மருத்துவ படிப்புகளுக்கான முதல்சுற்று மாநில கலந்தாய்வில், கல்லூரிகளை தேர்வு செய்வதற்கான கால அவகாசம் நாளைவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இறுதிபட்டியல் வரும் 8ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

**தமிழ்நாட்டில் 11, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு** எழுதிய மாணாக்கரின் அசல் சான்றிதழ் நாளை மறுநாள்முதல் வழங்கப்படும் என அரசு தேர்வுகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

மாணாக்கர் தாங்கள் பயின்ற பள்ளியிலும், தனித்தேர்வர்கள் தேர்வு மையம் மூலமாகவும் இதனை பெறலாம்.

**********

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கு கடலோர பகுதிகளில் கடல் சீற்றம் காரணமாக, லெமூர் கடற்பகுதியில் நீர் ஊருக்குள் புகுந்ததால், சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**உதகை**

நீலகிரி மாவட்டத்தில் இன்று மழை குறைந்ததால் உதகை அரசு தாவரவியல் பூங்கா மற்றும் ரோஜா பூங்கா சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**பனிமயமாதா**

தூத்துக்குடி தூய பனிமயமாதா பேராலயத்தின் 443-வது ஆண்டு பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மாதாவின் சொரூப பவனி **இன்றுமாலை நகர வீதிகளில்** நடைபெறுகிறது

மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**********

**கூடைபந்து**

சவுதி அரேபியா ஜெட்டாவில் நடைபெறும் ஆசிய கோப்பை கூடைபந்து போட்டியில் இந்தியா இன்று ஜோர்டானை எதிர்கொள்கிறது.

**********

**டென்னிஸ்**

லண்டனில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரிட்டனின் Hannah Klugman –ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**